[1978 செப்டம்பர் 9

(திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்........)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுள்ள கேள்வி அவர்களுடைய தொகுதியைப்பற்றியது. நீங்கள் ஏன் எழுந்திருக்க வேண்டும் ?

திரு. சி. ஆறுமுகம்: எந்தக் கேள்வி வந்தாலும் அதைப்பற்றி கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே, நீங்கள் இப்படித் தீர்ப்புச் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நான் சொல்வதை சற்றுக் கேளுங்கள், கேள்வி கேட்டிருக்கக்கூடிய தொகுதியைப்பற்றி உபகேள்விகள் இருக்க வேண்டும் என்று பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: அப்படிச் செய்திருப்பது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி உங்கள் கட்சித் தலைவரிடம் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இது பொதுவான கேள்விதானே?

திரு. சி. ஆறுமுகம் : பாராளுமன்றத்திலே இந்தியாவிலுள்ள பிரச்னைகளை எல்லாம் கேட்கலாம் என்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பேசாமல் உட்காருங்கள். பேசுவதற்கு அனுமதி கேட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுங்கள். இப்போது பேசி முடிந்தாகி விட்டதா ; உட்காருங்கள்.

மோத்தக்கல் ஊராட்சியிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*வினா எண் 105—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதி, 132. மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117/2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தில் பட்டா எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) ஏற்கெனவே அனுபவித்து வருபவர்களுக்கு தாமதமில்லாமல் பட்டா வழங்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

1978 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ), (ஆ), & (இ) மோத்தக்கால் கிராமத்தில் உள்ள சர்வே எண் 117-2-இல், 1972 ஆம் வருடம் விவசாயத்திற்கு லாயக்கான 50.63 ஏக்கர் நிலம் 38 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது. அந்நிலத்தில் எஞ்சியுள்ள 455.59 ஏக்கர் பாறை நிலமானதால் விவசாயத்திற்கு லாயக்கற்றவை. இதில் யாதொரு ஆக்ரமணமும் இல்லை.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எனது தொகுதியில், மோத்தக்கல் ஊராட்சிப் பகுதியிலுள்ள சர்வே எண் 117—2-இல் உள்ள தீய புறம்போக்கு நிலத்தை சிலருக்குப் பட்டா செய்து கொடுத்திருப்பதாகவும், மேலும் பட்டா வழங்குவதற்கு அந்த நிலம் தகுதியற்றதாக இருக்கின்றது என்றும் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த தீய புறம்போக்கு நிலத்தில் ஏற்கெனவே சாகுபடி செய்யும் ஏழை விவசாயிகள், அரசு தங்களுக்குப் பட்டா வழங்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த தீய புறம்போக்கு நிலத்தை ஏற்கெனவே சாகுபடி செய்துவரும் ஏழை விவசாய மக்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அங்கே உள்ள மற்ற நிலங்கள் விவசாயத்திற்கு ஏற்றதில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனல், உறுப்பினர் அவர்கள் ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஏழை விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலங்கள், உண்மையிலேயே அரசுக்குத் தேவையில்லாமல் இருக்குமானல், அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்குவதிலே எவ்வித ஆட்சேபணையும் இல்லை.

திருக்கோவிலூர், விழுப்புரம் வட்டங்களில் மனைப் பட்டாக்கள்.

*வினு எண் 106— திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977—78-ல் தென்னுற்காடு மாவட்டம். திருக்கோவிலூர் , விழுப்புரம் தாலுகாக்களில் வீட்டுமனை பட்டா கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப் பட்டது?

(இ) தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் எத்தனை?